



தமிழ்நாடு அரசு

## வேளாண்மைப் பொறியியல் துறை

# வேளாண் இயந்திரங்கள் மற்றும் சூரிய சக்தியால் இயங்கும் பம்புசெட்டுகள் பழுது நீக்கும் பராமரிப்பு மையம் மானியத்தில் அமைக்கும் திட்டம்

விவசாயிகள் தங்கள் வேளாண் இயந்திரங்கள் மற்றும் சூரிய சக்தியால் இயங்கும் பம்புசெட்டுகளை தங்கள் விளை நிலங்களிலேயே பழுது நீக்கி பராமரிக்கவும், வேளாண் பணிகளை எவ்வித இடர்பாடுகளுமின்றி குறித்த நேரத்தில் செய்திடவும், கிராமப்புற இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்கி, நிலையான வருமானம் ஈட்டி பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்கத்துடனும் இம்மையங்கள் வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் மானியத்தில் அமைக்கப்படுகின்றன.

**மானிய விவரம்**

கிராமப்புற இளைஞர்கள், தொழில் முனைவோர், விவசாய குழுக்கள் அல்லது உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு இம்மையங்கள் மானியத்தில் அமைத்துத் தரப்படும். இம்மையங்கள் ரூ.8.00 இலட்சம் செலவில் அமைக்கப்படுகின்றன. இதில் 50 சதவீத மானிய அடிப்படையில் அதிகபட்சமாக ரூ.4.00 இலட்சம் மானியம் வழங்கப்படுகிறது.





**வேளாண் இயந்திரங்கள் மற்றும் சூரிய சக்தியால் இயங்கும் பம்புசெட்டுகள் பழுது நீக்கும் பராமரிப்பு மையம்**

**விண்ணப்பிக்கும் முறை மற்றும் மானியம் பெறும் முறை**

வேளாண் இயந்திரங்கள் மற்றும் சூரிய சக்தியால் இயங்கும் பம்புசெட்டுகள் பழுது நீக்கும் பராமரிப்பு மையம் மானியத்தில் அமைக்க விரும்புவோர் தங்கள் அருகாமையிலுள்ள வேளாண்மைப் பொறியியல் துறையின் உதவி செயற்பொறியாளர் (வே.பொ) அலுவலகத்தை அணுகி விண்ணப்பித்தினை வழங்கவேண்டும். போதிய இடவசதியும், மும்முனை மின்சார இணைப்பும் கொண்ட பயனாளிகளான கிராமப்புற இளைஞர்கள், தொழில் முனைவோர்கள், விவசாய குழுக்கள் அல்லது உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள், மாவட்ட ஆட்சித் தலைவரின் மாவட்ட அளவிலான செயற்குழு கூட்டத்தில் ஒப்புதல் பெற்ற பின்னர், பயனாளிகளுக்கு

இம்மையம் மானியத்தில் அமைத்துத் தரப்படுகிறது. மையங்கள் அமைக்கத் தேவையான இயந்திரங்கள் ஒப்பந்தப் புள்ளி அடிப்படையில் கண்காணிப்புப் பொறியாளர் (வே.பொ) அவர்களால் முடிவு செய்யப்படுகிறது, இம்மையங்களுக்குத் தேவையான பழுது நீக்கும் கருவிகள் மற்றும் உபகரணங்களை பயனாளிகள் தங்களின் விருப்பம்போல், அந்தந்த பகுதிகளுக்கு ஏற்ற வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளை பழுது நீக்கிடும் வகையில் தேர்வு செய்து கொள்ளலாம்.

அவ்வாறு தேர்வு செய்யப்பட்ட இயந்திரங்களுக்கான மொத்த தொகையினை நிறுவனத்தின் பெயரில் வரைவோலை எடுத்து உதவி செயற்பொறியாளர் (வே.பொ) அலுவலகத்தில் வழங்கவேண்டும். பின்னர், செயற்பொறியாளர் (வே.பொ) அவர்களால் அந்நிறுவனத்திற்கு வழங்கல் ஆணை வழங்கப்படும். நிறுவனம் பயனாளிக்கு இயந்திரங்கள் வழங்கிய பின்னர், வேளாண்மைப் பொறியியல் துறையின் அதிகாரிகளால் நேரில் ஆய்வு செய்து உரிய வழிமுறைகளின்படி மானியம் பயனாளியின் வங்கிக்கணக்கில் நேரடியாக செலுத்தப்படும்.

எனவே இத்திட்டத்தின் கீழ் பயன்பெற ஆர்வமுள்ள கிராமப்புற இளைஞர்கள், தொழில் முனைவோர், விவசாய குழுக்கள் அல்லது உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் அருகாமையிலுள்ள வேளாண்மைப் பொறியியல் துறை உதவி செயற்பொறியாளர் (வே.பொ) அலுவலகத்தினை அணுகி பயன் பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களை பற்றி அறிந்துகொள்ள மற்றும் விண்ணப்பிக்க கீழ்க்கண்ட இணைய தளத்தில் பதிவு செய்திடவும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

https://aed.tn.gov.in

**மேலும் தொடர்புக்கு**

| | |
|---|---|
| தலைமைப் பொறியாளர் (வே.பொ).<br>வேளாண்மைப் பொறியியல் துறை,<br>எண். 487, அண்ணாசாலை, நந்தனம்,<br>சென்னை – 600 035.<br>தொலைபேசி எண்: 044-29510822<br>இமெயில்– aedcewrm@gmail.com, | சம்பந்தப்பட்ட செயற்பொறியாளர் (வே. பொ) மற்றும் உதவி செயற்பொறியாளர் (வே. பொ) |